புதிய கழகம்-பழைய கழகம்:

Phone No. 4502
விலை அணா ஒன்று]

Regd. No. M. 5458
[இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1 | சென்னை (22—10—49) | வெளியீடு (23—10—49) | இதழ் 7 X2

இரட்டைக் குழல் துப்பாக்கி ஆகலாம்

கழக எதிர்காலத்தை அடகுவைப்பதை ஆதரிக்கவில்லை

வேதனையின் விளைவால் வெளியேறினோம்

தி. மு. கழகம் ஜனநாயக அரும்பு

தென்மேற்கு திராவிடப் பகுதிகளில் அண்ணாத்துரை

இடந்தேடிகள் மூட்டிவிடும் பகை உணர்ச்சிக்குப் பலியாகாமலிருந்தால், திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய இரண்டும், மோதிக்கொள்ளாமல், இரு சக்திகளும், ஒருசேர, பழமையையும், பாசீசத்தையும் தாக்கும், இரட்டைக்குழல் துப்பாக்கியாக நாட்டிலே விளங்கலாம்.

* * *

திராவிடர் கழகத்துக்கு ஒரு ஏற்பாடு செய்கிறேன் என்று கூறிக்கொண்டு, கழகத்தவரின் எதிர்காலத்தையே அடகுவைக்கும் போக்கிலே ஒரு திருமணம் செய்துகொண்டார் பெரியார், அந்தத் தாங்க முடியாத வேதனையின் விளைவே திராவிட முன்னேற்றக் கழகம்.

* * *

ஆட்சியாளர்களும் மாற்றுக் கட்சியினரும் திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக்கழகம் என்ற இரண்டும் இரண்டாகப்பிளந்து போய்விட்டன என்பதைத் தவருக அர்த்தம் செய்துகொண்டு தமதுஆதிக்கத்தை நிலைநிறுத்திக்கொள்ள முனைவார்களானல், திராவிட முன்னேற்றக் கழகம் அதற்கு ஒருபோதும்இடமளிக்கப்போவதில்லை.

* * *

சமுதாயத்துறையிலே உள்ள இழிவு நீக்கப் போர்புரியும் பண்பினர் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தமக்கு ஏற்ற பாசறையாகக்கொள்ள வெண்டுகிறேன்.

* * *

திராவிட முன்னேற்றக் கழகம், ஜனநாயக அரும்பு; ஆர்வமிக்க தோழர்களின் அணிவகுப்பாக இது விளங்கும்; கொள்கையைப் போற்றும் பண்பினரின் போர்முகாமாக இது அமைக்கப்படுகிறது.

* * *

இதுபோன்ற கருத்துரைகளையும், விளக்கங்களையும் கூறி தோழர் அண்ணாத்துரை, கோவை, சேலம், ஓமலூர், உடுமலை. பல்லடம், திருப்பூர், ஆகிய இடங்களிலே, திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழாவினைச் சிறப்புற நடத்தி வைத்தார். இந்த சுற்றுப்பயணத்தைத் தோழர்கள் பெத்தாம்பாளையம் பழனிச்சாமியும், சேலம் சித்தையன் அவர்களும் முன்னின்று அமைத்து நடத்தினர். திராவிட முன்னேற்றக் கழகக் கொடி ஏற்றவிழா. ஆங்காங்கு சிறப்புற நடைபெற்றது உணர்ச்சியும் உற்சாகமும். காட்டி, ஆயிரக்கணக்கான வாலிபர்கள் அரும்பணியாற்றினர். எல்லா ஊர்களிலேயும், திராவிட முன்னேற்றக் கழக அலுவலகங்கள் அமைக்கப்பட்டு ஆக்கவேலைகள் தொடங்கப்பட்டுவிட்டன. உறுப்பினர் சேர்க்கும் பணியினைத் தோழர்கள் திறம்படசெய்து வருகின்றனர். பெரியாரின் திருமண ஏற்பாட்டால் மனம் புண்பட்டு, இதன் காரணமாக, திராவிடருக்கிடையே மோதுதலும் குழப்பமும் விளைந்து, பகுத்தறிவுப் பிரசாரப்பணி பாழ்பட்டுவிடுமோ என்று பயந்தும் போயிருந்த பலருக்கு; திராவிட முன்னேற்றக் கழகத் துவக்கு விழா சொற்பொழிவு, நம்பிக்கையையும் உற்சாகத்தையும் ஊட்டிற்று. எதிர்க்கட்சியினருக்குப் பெரிய ஏமாற்றமாக அமைந்தது இந்தச் சுற்றுப்பயணம். புதிய கழகத்தினர், பழைய தலைவரைத் தாக்கிப் பேசுவர், காதுகுளிரக் கேட்கலாம் என்று எண்ணிக்கொண்டிருந்த பாசிஸ்டுகளும் பழமை விரும்பிகளும், திராவிட முன்னேற்றக் கழகத்தினரின் பிரச்சாரப் போக்கைக் கண்டு, திகைத்துப்போயினர். திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட மக்களின் விடுதலைக்காகப் போரிடக் கிளம்பியுள்ள முன்னணிப்படையினர் என்பதை உணர்ந்தனர். மாற்றுக் கட்சியினர் செய்யும் தவறுகளையும், மகரிஷிகள், கடவுள்கள் ஆகியோரின் குற்றம் குறைபாடுகளையும்கண்டிக்கும் இந்தப் பகுத்தறிவு வாதிகள், தங்கள் தலைவர் செய்யும் தவறை மட்டும் கண்டிக்கும் நாடி முறுக்கு கொண்டவர்களல்ல, என்ற ஏளனப் பேச்சுக்கு இடம் ஏற்படாத முறையில், தவறு எனக் கண்டதைத் தைரியமாகக் கூறிட முன்வந்தனர், திராவிட முன்னேற்றக் கழகத்தினர், இதுதான் நேர்மைக்கு அறிகுறி என்று பலரும் பாராட்டினர்.

தோழர் அண்ணாத்துரையிடம் வந்து பேசிய, இடக்கத் தோழர்கள் அனைவரும், திராவிட முன்னேற்றக் கழகம் என்ற தனி அமைப்பை, கண்ணியமான முறையிலே ஏற்படுத்தியதைப் பாராட்டினர் பெரியார், உங்களை இப்படி நன்கு வேலை செய்ய வைப்பதற்காகவே திருமணம் செய்துகொண்டார்போலும்! என்று நகைச்சுவை ததும்பச் சிலர் பேசினர். எங்கும், உற்சாகமும் திராவிட முன்னேற்றக் கழகத்துக்குப் பேராதரவும் இருக்கின்றன. மாநாடுகள், கண்காட்சிகள், பொதுக்கூட்டங்கள் நடத்துவதற்குப் பலர் முன்வந்துள்ளனர். மழைகாலமாக இருப்பதால், இந்த ஆர்வமிக்க செயலை உடனடியாகச் செய்வதற்கில்லை, உறுப்பினர்களை உடனடியாகச் சேருங்கள், என்று அவர்களுக்கு அண்ணாத்துரை கூறினர் பல குக்கிராமங்களிலிருந்தெல்லாம். கூட்டத்தில் கலந்துகொள்ள இயக்கத் தோழர்கள் வந்திருந்தனர். பேளுக்குறிச்சி தோழர் சோமசுந்தரம், சேலம் மாவட்டத்தில் பல

இடங்களிலே திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழா நடத்தத் திட்டம் வகுத்துக் கொண்டிருக்கிறார். கோவை மாவட்டத்திலே, அதிகமான அளவு உறுப்பினர்கள் சேர்க்கும் தாலுக்காவுக்கு பரிசுக்கோப்பையை, தோழர் பெத்தாம் பாளையம் பழனிச்சாமி ஏற்பாடு செய்திருக்கிறார். விரைவில் கோவைமாவட்ட திராவிடமுன்னேற்றக் கழக மாநாட்டை, கணியூரில் நடத்தத் தோழர் முருகேசன் முன் வந்திருக்கிறார். திராவிட முன்னேற்றக் கழகம், எவ்வளவு நேர்மையான காரணத்துக்காகத் துவக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிந்து ஆயிரக்கணக்கானவர்கள், அந்த அரும் முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் காட்டிவருகின்றனர். திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழாக்கள். எங்கும் வெற்றிகரமாக நடைபெற்று, நற்பயனைத்தந்துள்ளன. 16ந் தேதி மாலை கோவையிலும், 17ந் தேதி காலை, சேலம் அம்மாப்பேட்டை ரோடு, ஓமலூர், பிற்பகல் அரிசிப்பாளையம், மாலையில் செவ்வாப்பேட்டை, ஆறு மணிக்கு மார்க்கட் மைதானம் ஆகிய இடங்களிலும், 18ந் தேதி உடுமலைப்பேட்டையிலும் 19ந் தேதி பிற்பகல் பல்லடத்திலும், இரவு திருப்பூரிலும், திராவிட முன்னேற்றக் கழகத் துவக்கவிழாக் கூட்டங்கள நடத்திவிட்டுத் தோழர் அண்ணாத்துரை, 20ந்தேதி பிற்பகல் கிளம்பி, விமானமூலம், மாலை சென்னை வந்து சேர்ந்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழாக் கூட்ட நிகழ்சசிகளின் சுருக்கம் கீழே தரப்பட்டிருக்கிறது.

"திராவிட நாடு" வழக்கு

'திராவிட நாடு' இதழுக்கு, சர்க்கார் கேட்டபடி 3000 ரூபாய் ஜாமீன் தொகை கட்டப்பட்டிருப்பதைத் தோழர்கள் அறிவர்.

மேற்படி ஜாமீன் கேட்டதை எதிர்த்து, தொடரப்பட்டுள்ள வழக்கு, சென்னை உயர் நீதிமன்றத்தில், இம்மாதம் 24ந் தேதி, விசாரணைக்கு வருகிறது. 'திராவிட நாடு' இதழின் சார்பில் அட்வகேட்டுகள், துரைராஜ், F. ஜெகனுதன் இருவரும் ஆஜராகின்றனர்.

16-10-49 காலையில தோழர் சி. என. அணணாததுரை எம. ஏ. அவர்கள கோவைககு நீலகிரி எகஸ்பிரஸில வந்து இறங்கினாகள. கோவை மககள திரள திரளாகப புகைவணடி நிலையததிறகு வநது. மலர்மாலையிட்டு. வரவேறறு அழைததுச சென்றனர். அண்ணா. பகல 12 மணி வரை கழக முககியஸதாகளுடன இயக்க விஷயங்களைப் பற்றிப் பேசினா. பினனா சுமார் ஒரு மணிககுச கோவை நகர திராவிட முனனேறறக கழகக கட்டிடத்திறகுச சென்று, நகர முக்கியஸதாகளுடனும, கழகத தோழாகளுடனும கூடிக கலந்துபேசினா. அஙகு திரளான மக்களும, வாலிபரும கூடி வரவேறறனர்.

மாலை 4 மணியிலிருநதே கூட்டம பெரிதும் கூடி விட்டது. கோவை காரனேஷன் பார்க்கில திடீரென 5 மணிக்குப் பெரு மழை பிடித்துக் கொணடது.

மழையால் மக்கள் மிக்க சங்கடமடைந்தனர். என்றாலும அவர்கள் கலையாது, நிலைகுலையாது, நின்று கூட்டத்தை நடத்தினர். சுமார் 6 மணிக்கு துவக்க விழா தொடங்கியது. திராவிட நாட்டுப பண் சிரிய முறையில் பாடப்பட்டது. பினனர், தோழர் பெத்தாம பாளையம் பழனிச்சாமி அவர்கள் கூட்டத்தலைவராக அமர்ந்தார். அவர் தமது பேசசில் "திராவிட முனனேற்றக கழ

[தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க]

மாலை மணி

சென்னை 22—10—49 சனிக்கிழமை

அறிவூற்று அடைபடுகிறது!

பண்பாடு, மொழி, பழக்க வழக்கம் இன்ன பிறவற்றின் காரணமாக, மக்கள், இடத்திற்கு இடம் வேறுபாடுடையவர்களாய் அமைந்து, இனம் இனமாகப் பிரிந்து வாழ்கிறார்கள், இப்பரந்து பட்ட உலகில்.

மக்களிடையே காணப்படும் இனவேறுபாட்டை நுணுகி ஆராய்ந்து, அறிந்து, மக்களைப் பெரும் பிரிவாகப் பிரித்துக்காட்ட முயன்ற ஆராய்ச்சி வல்லுநர்கள், துரானியர் என்றும், காக்கேஸியர் என்றும், ஆரியர் என்றும், திராவிடர் என்றும், மங்கோலியர் என்றும் பல்வேறு இனங்களாகப் பிரித்தனர், மக்கட் கூட்டத்தினரை.

இந்த இனங்கள், எப்படிப்பட்ட முரண்பாடுகளையும், வேறுபாடுகளையும் கொண்டிருக்கின்றன என்பது பற்றியும், அவைகளுக்குள் மோதுதல்கள் ஏற்பட்டிருந்தால், எப்படி, எப்பொழுது, ஏன் ஏற்பட்டன என்பது பற்றியும், வரலாற்றுத் துறையில் துறைபோய ஆராய்ச்சி வல்லுநர்கள் பெரும் பெரும் நூல்கள் எழுதி வெளியிட்டிருக்கின்றனர்.

இனவேறுபாடுகள், மறையும் அளவுக்குச் சிற்சில இடங்களில் கருத்துக்களில் கலப்பு ஏற்பட்டன; மாற்றப்படவேண்டிய அளவுக்கு இப்பொழுது காலமும் வளர்ந்துவிட்டது. ஆனால் இனவேறுபாடுகள் இருந்தன, அவற்றின் அறிகுறிகள் முழுவதும் இன்று அழிந்துவிடாமல், சில இடங்களில் மிகுந்தும், சில இடங்களில் குறைந்தும் இருக்கின்றன, என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்த அறிகுறிகளைத் தேவை ஏற்படும்போது—தேவை ஏற்படுத்தப்படும்போது, சுட்டிக்காட்டுவது தவறாகாது.

இந்த அடிப்படைப் பண்பை வைத்துக்கொண்டுதான், தன்னை யார் என்று அறிந்து கொள்ளமல் அடிமைப்பட்டிருந்த திராவிட இனத்தை, அறிந்து கொள்ளும்படி செய்ய, அடிமைப்படுத்திய இனத்தைப்பற்றியும், அடிமைப்பட்டவகையைப்பற்றியும், அடிமைப்பட வேண்டிய அவசியமில்லாத தன்மையைப் பற்றியும் வரலாற்றுச் சான்றுகளின் மூலம், சுட்டிக் காட்டத் தலைப்பட்டோம் திராவிடர் இயக்கத்தைச்சேர்ந்தவர்களாகிய நாம்.

நூல் நிலையங்களிலே, நூல் வடிவில் எழுதி வைக்கப்பட்டிருக்கும் வரலாற்றுச் சான்றுகளை ஆதாரமாகக்கொண்டு, இனப் பிரச்சினைகளைச் சுட்டிக் காட்ட நாம் முற்படும் போது, வைதிகமதத்தினரின் வழிநிற்கும் அரசாங்கம் தடை செய்ய முற்படுகிறது. இது முறையா என்று கேட்டால், கேட்கவே உரிமை கிடையாது என்று அடக்குமுறை அம்பை வீசி எறிகிறது!

வரலாற்றுச் சான்றுகளை மக்கள் முன் எடுத்து வைத்து, மக்களுக்கு நாம் தெளிவுணர்வு கொடுத்து விடுகிறோம், என்று அஞ்சிய 'வைதிகமத' அரசாங்கம், இலக்கியங்களாகக்கொள்ளப்பட வேண்டிய பல திராவிடர் இயக்க நூல்களை எல்லாம் பறிமுதல் செய்தும், எழுதியவர்களுக்கு, வெளியிட்டவர்க்கு, அச்சிட்டவர்களுக்கு அபராதம் விதித்தும், சிறை தண்டனை கொடுத்தும், சீரழித்து வருகின்றது.

'இரண்யன் அல்லது இணையற்ற வீரன்' என்ற நாடக இலக்கியம், இராவண காவியம்' என்ற, காவிய இலக்கியம், 'விடுதலைப் போர்', இலட்சியவரலாறு' 'ஆரிய மாயை' போன்ற வாலாற்றுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட உரை நடை இலக்கியங்கள், ஆகிய இவையும், இவை போன்றனவும் இனப் பிரச்சினைகளை (வரலாற்று நால்களில் வந்துள்ளவைகளை விளக்கிக் காட்டிய காரணத்திற்காக அவ்விலக்கிய நூல்களையெல்லாம் தடை செய்திருக்கிறது இன்று ஆளவந்திருக்கும் அரசாங்கம். அதற்கு அரசாங்கம் சொல்லும் சமாதானம், இனப் பிரச்சினை பற்றிய (உண்மைக்) கருத்துக்கள் ஒரு சிலரின் மனத்திற்குப் புண்படும் தன்மையனவாக அமைந்திருப்பதால், அப்படிப்பட்ட அந்த ஒரு சிலரைக் காப்பாற்றவே (பிற்காலத்தில் பேரிலக்கியங்களாய்ப் போற்றப்படக் கூடிய) நூல்களை யெல்லாம் • தடைசெய்ய வேண்டி நேரிட்டது என்பதாகும்.

இதுபோன்றே மதசம்பந்தமான கருத்துக்களைப்பற்றி, விஞ்ஞான வழி நின்று ஆராய்ந்து எழுதப்பட்ட நூல்களையும் தடை செய்துவிடும் மனப்பான்மை இந்த 'வைதிக' அரசாங்கத்திடம் இருக்கக் காண்கிறோம்.

"உடுமலை நிரங்கி" என்ற வார இதழில், கிருத்தவ மதக் கருத்து பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்று வெளிவந்ததற்காக, கட்டுரை ஆசிரியர், வெளியிட்டவர், அச்சக உரிமையாளர் ஆகியோர் மீது நடவடிக்கை எடுத்துள்ளது அரசாங்கம். மதத்தைப்பற்றிப் பரப்ப எவ்வளவு உரிமை வேண்டுமானாலும் தரப்படும்; ஆனால் அம்மதம் பற்றிய தன்னுடைய மாறுபாடான கருத்தை ஒருவன் கூறுவானானால் அவன் தண்டனை பெறவேண்டியவன்! இதற்குப் பிறகும் சொல்லிக் கொள்கிறது இன்றைய அரசாங்கம், தன்னை 'மதச் சார்பற்ற அரசாங்கம்' என்று.

"கருஞ்சட்டை ஒழிக!" என்று மிகமிக ஆபாசமான முறையில் எழுதிய புத்தகம் நடமாடலாம்; ஆனால் அதற்கு மறுப்பாக கண்ணியமான சொற்களைக் கையாண்டு எழுதிய "கருஞ்சட்டை ஒழியவேண்டுமா?" என்ற புத்தகம் நாட்டிலே நடமாடக் கூடாது. ஏன் இந்த ஓரவஞ்சகம்? இருக்கலாமா "பொதுமக்கள்' ஆட்சியில்!

ஒரு சாராருக்குச் சலுகை காட்டி, மற்றொரு சாரார்மீது எந்தெந்தவிதமான 'சட்ட ஆயுதங்களை, ஏவமுடியுமோ அவைகளை ஏவி, மாறுபட்டக் கருத்தினரை அழித்துவிடும் முயற்சி, பாசிச ஆட்சி முறையிலே அன்றாட நடவடிக்கையாக இருப்பது வழக்கம். அத்தகைய முயற்சியிலே தேர்ச்சிபெற்று வருகிறது காங்கிரஸ் சர்க்கார்!

அண்மையில் "ஜனதா" பிரசுக்கு ஆயிரம் ரூபாய் ஜாமீன் கேட்டுவிட்டுப், பிறகு ஒரு வாரத்திற்குள் அந்த உத்தரவை அரசாங்கம் மாற்றிக் கொண்டுவிட்டதாகச் செய்தி வந்தது. நமது சகோதர பத்திரிகை வெளியிடப்பெறும் பிரஸ் தனக்கேற்பட்ட கஷ்டத்தினின்றும் தப்பித்துக் கொண்டதற்கு மகிழ்ச்சி அடைகிறோம். ஆனால் அரசாங்கத்தின் பார்வை ஒரு பக்கம் குளிர்ச்சி பயப்பதாகவும், மற்றொரு பக்கம் கோபக்கனல் கக்குவதாகவும் இருப்பானேன் என்று கண்களிலே ஏற்பட்டிருக்கும் பழுதிற்குக் காரணம் கேட்கிறோம்.

ஓரவஞ்சகமும், உயர்மதிக் கொள்கையினரை ஒழித்துக்கட்டும் முயற்சியும், நாகரிக நாட்டிலே இருக்கக் கூடாது! ஆனால், வெள்ளை யேகாதிபத்திய ஆட்சிக் காலத்தைக் காட்டிலும், அவை, இப்பொழுது தலைவிரித்தாடுகின்றன.

அறிவுப் புரட்சியை இந்நாட்டில் ஏற்படுத்த, முற்போக்கு எழுத்தாளர்கள் முனைகிறாகள். அவர்களுடைய எழுதுகோல்களை ஒடித்து, நூற்களை மறைத்து-தடுத்து, அச்சகச் சாதனங்களை அழித்து, அறிவூற்றுக்களை அடைத்து விடும் பணியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

'அறிவூற்று அடைபடுகிறது' என்ற பெருங்குரலை எழுப்புகிறோம், அவனி கேட்டுச் சிரிக்கட்டும்!

தேசிய மொழித் தொல்லை தீர்ந்தது

தேசிய உடுப்புப் பற்றியும் முடிவேற்பட்டது

அரசியல் நிர்ணய சபையிலே தேசியமொழி மாபெரும் வாதப்போருக்காளாகிக் கடைசியில் முடிவு செய்யப்பட்டாகியது. பின்னர் தேசிய உடை விஷயமும் முடிக்கப்பட்டது. தேசியக் கடவுள் விஷயம் வாதத்துக்கு வந்து பெரும்பான்மையோர் எதிர்ப்புக்காளாகி ஒழிந்தது. வாாமல் தவறிவிட்டது தேசிய உணவு விஷயமே யாகும். இதைப் பற்றியும் காரசாரமாகப் பேசி, ஒரு முடிவுக்கு வந்திருந்தால் நன்மையாக இருந்திருக்கும்! மற்றவற்றினை விட இது மிகவும் முக்கியமானதாக தேசிய அரசியல் நிர்ணயசபையினருக்குத்தோன்றவில்லைபோலும் எனவேதான் 1 கோடி ரூபாய் செலவுசெய்து 107 நாட்கள் வாதாடிக் காலங்கழித்தும் தேசிய உணவைப் பற்றிக் கவனிக்கவில்லை, தேசிய அரசியல் நிர்ணயசபை.

இனியேனும் அரசியல் நிர்ணய சபை மறந்துவிட்ட இதனை நம் மாகாண அரசாங்கமாவது கவனித்து கதர்த் துணியைத் தேசிய உடையாக்கியது போல, கவர்னர் ஜெனரல் ராஜாஜீ மாளிகைத் தோட்டத்து, கவர்னர் மாளிகைத் தோட்டத்துச் சோளமாவுதான் தேசிய உணவு என்றுவது முடிவு காணவேண்டுகிறோம். ஏனெனில வேறுவகையில் உணவுப் பஞ்சத்தை ஒதிக்க வழியில்லாதபடியால, இவ்வாறேனும் ஏதாவது ஒரு குறுக்குப் பாதையில் சென்று உணவுப்பொருள் ஈட்டுதல் நல்லதல்லவா?

முத்தமிழ் மாநாடு

சென்னையில், டிசம்பர் திங்கள், முதல் வாரத்தில் திராவிட முன்னேற்றக்கழகத்தினரால், முத்தமிழ் மாநாடு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது. விபரம் விரைவில்.

பொறுப்பாளர்,

தி. மு. தலைமைக் கழக அலுவலகம்.

சென்னை.

காங்கிரஸ் (வகுப்புவாத) மகாசபை!

வரலாற்றை-மக்களை-தங்களையே மறந்த தலைவர்கள்

ராஷ்ட்ரீய சுயம் சேவச் சங்கம் அப்பழுக்கற்ற வகுப்புவாத சபை என்பது காட்டோர் அனைவரும் கண்கறிந்துள்ள உண்மையாகும். காந்தியடிகளின் கொலைக்குக் காரணமாயிருந்தது அச்சங்கத்தின் போதனைகள் வாய்ப்பட்ட ஒருவனே என்பதும், அதற்காகவேண்டி அச்சங்கத்தலைவருட்பட பல சங்க முக்கியஸ்தர்கள் சிறையிலடைக்கப்பட்டனர், என்பதும் நாடறிந்த செய்திகள்.

இத்தகையதொரு சங்கத்தை ரா. சு. சே சங்க அங்கத்தினர்களைக் காங்கிரசில் சேர்த்துக் கொள்ளக் காங்கிரஸ் காரியக் கமிட்டி முடிவு செய்துவிட்டதென்றால், காங்கிரசின் போக்கு என்னவாயிருத்தல் வேண்டும் என்பதைத்தான் நாம் கவனிக்க வேண்டும்.

காங்கிரஸ் மகாசபை என்பதை, இனிக் காங்கிரஸ் வகுப்புவாத மகாசபை என்றுதான் கூற வேண்டும். காங்கிரஸ்காரர்கள் என்னதான் காரணம் கூறிய போதிலும், நாட்டுக்கு நல்லது புரிய முன்வந்த பிறரை வகுப்புவாதிகள் என்று கூறித்திரிந்து, தான் அப்பழுக்கற்ற சமதர்மவாதி போல நடித்தும், இறுதியின் அதன் உண்மை உருவம் வெளிப்பட்டுவிட்டதென்றே கூறுதல் வேண்டும்.

இன்று காங்கிரஸ்காரர்கள் தங்கள் இபக்கத்துக்கு ஏற்பட்டுள்ள ஆதரவின்மையைப் போக்கிக் கொள்ள, ரா. சு. சே. கூட்டத்தைத் தங்களுடன் சேர்த்துக் கொண்டதன்மூலம், வரலாறு, மக்கள் நிலை, தங்கள் நிலை முதலியவற்றையே மறந்துவிட்டதுடன், நாட்டைக் குழப்பத்திலும், விபரீதத்திலும் சாய்க்கத் துணிந்துவிட்டார்கள் என்றே கூறுதல் வேண்டும்.

ரா. சு. சே. சங்கத்தினர் தங்கள் உள்ளக்கிடக்கையை அதி

கார பதவியிலுள்ள ஒருகட்சியின மூலம் சாதித்துக்கொள்ள ஒரு நல்ல திட்டமிட்டே காங்கிரசில வந்து புகுந்துகொண்டனா. தங்களுக்கு எத்தகைய அரசியல் நோக்கமும் இல்லையெனக் கூறிக்கொண்டே அந்தக் காங்கிரசை தன்வயமாக்கிக் கொள்வதில் ரா. சு. சே. வெற்றிபெறுது விடும். ஏனெனில், காங்கிரசில அங்கம் வகித்திருக்கவர்களுள் பெரும்பாலோர் உண்மை அரசியல் வாதிகளாயில்லாமல், உள்ளத்தில் மதவாதிகளாயிருந்தவர்களாதலின், ரா. சு. சே. தன் வேலையை எளிதில் முடித்துக்கொள்ளக காங்கிரசில் இடமேற்பட்டுவிடும். இதன்மூலம் காங்கிரஸ் ஒரு பழுத்த வகுப்புவாத நிலையமாகமாறுவதில் வியக்கக்கூடியது ஒன்றுமிராது.

அரசியல் நிர்ணய சபையில் சமயப் போட்டி

இந்திய அரசியல் திட்டத்தின் முன்னுரையில் கடவுள் வாழ்த்து சேர்க்கப்பட வேண்டுமென்று, தோழர் காமத் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். தேவி உபசாரணைக் கூட்டத்தார் அதை ஏறக மறுத்து, தேவிதுதியுடன் துவக்க வேண்டுமென்றாகள். தேவிதான் சக்தி மிகுந்தவள் என்று வாதாடப்பட்டது. கடைசியாகத் தேவிதுதியா? தேவின்துதியா? இரண்டுமில்லையா என்ற சிக்கல ஏற்பட்டபோது, எதுவுமே வேண்டாம், தேவனும் வேண்டாம், தேவியும் வேண்டாம் என்று முடிவு செய்யப்பட்டுவிட்டது.

இந்த 20-ம் நூற்றாண்டில் கூட, அதிலும் இந்தியாவின் எதிர்கால அரசியல் திட்டத்தை வகுக்கும் மகாசபையில இவ்வாறு தேவி துதியா, தேவ துதியா என்ற பிரச்சினை கிளம்புகிறதென்றால் இதனை என்னென்பது! இந்நிகழ்ச்சியிலிருந்து நம் நாட்டுப் படித்தவாகள் என்போரின் மனப்போக்கும், அறிவும் எந்த அளவு வளர்ச்சி பெற்றிருக்கிறது என்பதை நன்கு அறிந்து கொள்ளலாம். கோடிக்கணக்கான கடவுள்களையும், லட்சக்கணக்கான கோயில்களையும் கொண்டுள்ள இந்த நாடுதான் உணவு-உடை-இருப்பிடப் பஞ்சத்தில் சிக்கிக் கரையேற முடியாமல தவித்துக் கொண்டிருக்கிறது என்பது இவர்கள் எப்படி உணர முடியும்!

திராவிடக் கூட்டாட்சிகான போராடுவோம்

நம்மைப் புறக்கணித்தத் தலைவரை நாம் புறக்கணித்தோம்

கோவில்பட்டியில் தி. மு. க துவக்கவிழா

17-10-49 கோவில்பட்டியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் துவக்கவிழா மிகச் சிறந்த முறையில கொண்டாடப்பட்டது. தூத்துக்குடியிலிருந்து பிறபகல 2 மணிக்கு வநது சேர்ந்த தோழர்கள் காஞ்சி. கல்யாணசுந்தரம் மு. கருணாநிதி இருவரையும புகைவண்டி நிலையத்தில நகர சபைத தலைவர் தோழர். இ. வி. ஏ. வள்ளிமுதது உள்ளிட்ட ஏராளமான தோழர்கள் வரவேற்று மாலைகளணிவித்து, மகிழ்ச்சி பொங்க-மகததான ஒரு பணியைத் தொடர்ந்து நடத்தும பொறுப்பை யேற்றிருக்கிறோம என்றமனததிடத்தோடு கழகக் கட்டிடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். நகரெங்கும் முன்னேற்றக கழகத்தின் துவக்கவிழாவை அறிவிப்பது போல சுமார் இருபது கொடிகளுககு மேல வானளாவிப் பறநதுகொண்டிருந்தன. புகைவண்டியில் போவோர் வருவோருககும புதிய அமைப்பை நினைவுபடுத்திக் கொண்டிருந்தன

இ. வி. ஏ. வள்ளிமுத்து

மாலை 6½ மணிக்கு ஜில் விலாஸ் சோடாத் தொழிற்சாலை முன்பு தோழா இ. வி. ஏ வள்ளிமுத்து அவர்கள் தலைமையில துவக்க விழாப் பொதுக் கூட்டம் ஆரம்பமாயிறறு. தலைவர் முனனுரையில "பெரியார கட்டளையை சிரமேற்கொண்டு, யாரையுமே தலைவர் என்று ஒப்புக கொள்ள மறுத்து, கொள்கை வழியில் நடநத என் போன்றாரை அவர நமபிக்கைக்கு லாயக்கற்றவர் என்று கூறியது போன்ற கொடுமை எதுவும இருக்க முடியாது. ஆனாலும அவா தலைமையிலிருநது விலகிவிட்ட நாங்கள் என்றும போல் பணியாற்ற முனைவோம்" என்று குறிப்பிட்டார்.

சே அருணாசலம்

அடுத்து தோழர்செ. அருணாசலம அவர்கள திராவிட முன்னேற்றக் கழகததின தோற்றம-அதறகுள்ள வேலை முறைகள்—அதில் திராவிடப பெருங்குடி மக்கள் கொள்ள வேண்டிய பங்கு—இவைகளை விளககிப்பேசினார்.

காஞ்சி. கல்யாணசுந்தரம்

தோழா காஞ்சி-கல்யாணசுந்தரம பேசுகையில், "ஐந்து லட்சம ரூபாய்க்காக-அதைப பாதுகாக்கும் ஏற்பாட்டுககாக—கொள்கையைப் பலி கொடுத்து, பொருநதாமணம புரிந்து கொள்வது—அநதத் தலைவரின் போக்கை நாங்கள ஆதரிப்பது என்றால் அவர் வளர்த்து வந்த பகுததறிவுககுததான என்ன மரியாதை இருககிறது? இதை யோசிததப் பிறகே புது அமைப்பில்-நாட்டுக்குத்தேவையான தொணடு ஸ்தமபித்து இருபபதை மாற்றி—மீண்டும பணிபுரிந்து ஏழை மக்களை ஏற்றெடுத்தும பார்க்காத அரசியல் ஊழல்களை விளக்கி—வடவர் ஆதிக்கத்தை ஒழித்து—திராவிடம் நலம் பெற வேண்டுமென்ற நன்னோக்கத்துடன் உங்கள் முன்னே வந்திருக்கிறோம். கொள்கை பெரிது; பூஜை முறையல்ல, என்ற நெஞ்சுறுதியே எங்களுக்கு வெற்றியை அளித்துள்ளது" என்பதாக நீண்ட நேரம் விரிவுரையாற்றினர்.

மு. கருணாநிதி

தோழர் மு. கருணாநிதி அவர்கள் தனது சொற்பொழிவில் "பெரியாரின் கொள்கை மீறிய செயல் கண்டு நாடே ~~ஆச்சரியப்பட்டது~~ புலி, புல்லைத்தின்ன ஆரம்பித்ததைப் பார்த்து ஏற்படுகிற ஆச்சரியத்தைவிட, இன்னிசைபாடிய குயில் ஒரு நாள் ஆந்தைக்குரலெடுத்து அலறினால், ஏற்படுகிற ஆச்சரியத்தைவிட-துள்ளி விளையாடும் புள்ளி மான் திடீரென ஆமை நடைபோட்டது கண்ட ஆச்சரியத்தைவிட—உறுமிக்கொண்டிருந்த சிங்கம், ஒரு தினம் நரி உருவில் ஊளையிட்டது கேட்ட ஆச்சரியத்தைவிட — அதிகமான ஆச்சரியங்கொண்டோம். ~~அதிர்ச்சி கொண்டோம்.~~ 'ஐயா ஆகாதே' என்று அழுதோம்! ஐந்து லட்சத்திற்காக இந்த அநியாய ஏற்பாடு செய்வதை விடுத்து அந்தப் பணத்திற்கு அவருடைய வெண்கலச் சிலைகளை தமிழ்நாட்டு வீடு தோறும் வழங்கியிருந்தால் கூட வரவேற்றிருப்போம். குதிரை, கீழே தள்ளியது மன்றி, குழியும் பறிப்பது போல கொள்கையைப் புறக்கணித்தத் தலைவர், கொள்கையை மதிககும் நம்மையும துரோகி, சுயநலமி, வயிற்றுப் பிழைப்புககாகக் கட்சிக்கு வந்தவர்கள் என்று தூற்றுகிறார். அது எந்த அளவு நியாயம்——நேர்மை—எனபதை பொது மக்கள் உணர்ந்துகொள்வார்கள். ஏனென்றால் பொதுமக்கள் அவ்வளவுதூரம காட்டுமிராண்டிக் காலத்தில இல்லை.

நாடு நெருக்கடி மிகுந்த நிலையிலே உள்ளது. பசி, பிணி, பஞ்சம இங்கே! இதை கவனிககக் கவலையற்று பண்டித நேரு அமெரிக்கப்பயணம் நடத்துகிறார். பயணம்மட்டுமல்ல, ட்ரூமனுக்குப பரிசும வழங்குகிறாராம். பரிசு, மைசூர் தந்தப் பேழையாம! பேழையிலே ராமாயண, பாரத கருததுரைகளாம. என்ன கருத்துரையோ; தசரதனுககு அறுபதினாயிரம மனைவியர் என்ற அதிசயக கருததோ—திரௌபதிக்கு ஐந்து காதலர் என்ற கற்பு மகிமையோ—என்னவோ!...

நமககு நிறைய வேலையிருக்கிறது. கன்னடக்காரரைக் கலந்து - மலையாளததாரோடு பேசி-ஆந்திரரோடு ஆலோசித்து-திராவிடக் கூட்டாட்சி அமைக்க வேண்டிய திட்டவட்டமான வேலைகள் நிறைய இருக்கின்றன. பாட்டாளித் துயர் தீர்க்க பழமை, பாசிசத்தோடு போரிட—இதற்குத் தடையாக நிற்கும் எதையும் எதிர்தது அறபபோர் நடத்த-வேலை தொடங்கிவிட்டோம். விரைந்துவாரீர் செயலாற்ற, தோழர்களே என அழைககிறேன்" என்பதாகச் சுமார் 2 மணி நேரம் பேசினார்.

தலைவர் முடிவுரைக்குப்பின், அழகிரிசாமி நினைவுப் படிபபகததின் சார்பாக தோழர்கட்கு மாலைகள் அணிவிககப்பட்டன. செயலாளா டபிள்யு. டி. துரைசாமி அவாகள் நன்றி கூறினார். முன்னேற்றமுழக்கத்தின் அவசியத்தை கூடியிருந்த மக்கள் மூவாயிரத்துக்கு மேற்பட்டவரும உணாந்து உற்சாகத்தில் மிதந்த வண்ணம் சென்றார்கள்.

சர்க்கரைப் போர்!

இந்திய அரசியலார் சர்க்கரைக் கட்டுப்பாட்டை நீக்கிய தன் விளைவை இப்பொழுது மக்கள் அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. கடந்த ஒரு திங்களாக சர்க்கரைப் பஞ்சம் மக்களை வாட்டி வருகிறது. அதிலும் கடந்த இரண்டு வாரங்களின் நிலை சொல்லத்தரமல்ல. எங்கு பார்த்தாலும் சர்க்கரைக்காகவே போராட்டம்

பம்பாயிலும் கல்கத்தாவிலும்

பம்பாயில் கடைகள் சூறையாடப்பட்டன. சென்ற இரண்டு நாட்களுக்கு முன் கல்கத்தாவில் பெண்கள் பலர் சர்க்கரை கிடைக்காத குறையை சர்க்காருக்குத் தெரிவிக்க வேண்டி ஒரு ஊர்வலத்தையே நடத்தி யிருக்கிறார்கள். இங்ஙனம் சர்க்கரை கோரி ஊர்வலம் சென்ற பெண்களுக்கு அரசியலார் தந்த பரிசு கண்ணீர்ப் புகை! ஆகா! என்ன அருமையான காட்சி! காரம்தான் கண்ணீரை வருவிக்கும் என்றால், நமது காருண்யம் மிக்க காங்கிரஸ் ஆட்சியில் சக்கரையும் கண்ணீரை வருவிக்கிறது! இது கல்கத்தா தரும் காட்சி. மற்ற இடங்களின் மகத்துவத்தையும் காண்போம்.

பூனாவில்

சர்க்கரை முதலிய இன்றியமையா உணவுப் பொருள்கள் விஷயமாக அரசியலார் சரியான நடவடிக்கை எடுக்காததைக் கண்டித்து வாசுதேவ் விநயசாதே என்னும் முதியவர் ஒருவர் கலெக்டர் அலுவலகத்தின் முன்பு உண்ணாவிரதம் ஆரம்பித்திருக்கிறாராம். தனது உண்ணாவிரதம் ஐந்து நாள் வரை நீடிக்குமென அவர் சொல்லுகிறாராம்.

சென்னையில்

சர்க்கரைக்காகப் போராடும் மக்களில் சென்னை மக்கள் மற்ற மாகாண மக்களையும் மிஞ்சிவிட்டனர். சென்ற புதன் கிழமை காலையிலிருந்து பல பங்கீட்டுக் கடைகள் முன்பு மக்கள் திரள்திரளாகக் கூடி நிற்கும் காட்சி பரிதாபகரமாக இருக்கிறது. கடைகள் முன்பு 'க்யூ' வரிசையில் நிற்கின்றனர் மக்கள். இத்தகைய பெருங் கூட்டத்தைக் கட்டுப்படுத்தி அமைதியை நிலைநாட்ட பலத்த போலீஸ் பாதுகாவல் போடப்பட்டிருக்கிறது.

கைத்தறி துணிகளையே வாங்கவேண்டும்

மாகாண அரசாங்கங்களை மத்திய அரசாங்கம் தூண்டுமா?

மத்திய அரசாங்கத்திற்கு வேண்டியுள்ள துணித் தேவையின் பெரும் பகுதியைக் கைத்தறி நெசவுத் துணிகளைப் பயன்படுத்தி நிறைவேற்றிக்கொள்வதென மத்திய அரசாங்கம் முடிவுசெய்திருக்கிறது. இதே போன்று, மாகாண அரசாங்கங்களும் அதனதன் தேவையைக் கைத்தறித் துணிகளைக் கொண்டே பூர்த்திசெய்து கொள்ளவேண்டுமென்று மத்திய அரசாங்கம் முடிவுசெய்துவிட்டால், கைத்தறித் துணிகள் ஓரளவுக்கு விற்பனையாகும்.

ரயில்வே போர்டு கைத்தறித் துணிகளை ரயில் மூலம் அனுப்பும் கட்டணச் சலுகை காட்டுவதாக அறிவித்திருக்கின்றனர். ஆனால், ரயில்வேக்களில் பயன்படுத்தும் துணிகள், ரயில்வே சிப்பந்திகளுக்கு அளிக்கும் துணிகள் ஆகியவை அனைத்தும் கைத்தறி நெசவுத் துணிகளாகவே இருப்பதென்று முடிவு செய்துவிட்டால், கைத்தறி நெசவாளர்களின் சங்கடம் ஒரு சிறு அளவுக்காவது குறையும்.

கைத்தறிவு நெசவு வேலையில், சுமார் 24 லட்சம் மக்கள் ஈடுபட்டிருக்கின்றனர். போர்க் காலத்திற்கு முன்னர், கைத்தறிகள் மூலம் சுமார் 47 கோடி ரூபாய் மதிப்புள்ள 190 கோடி கெஜம் துணி உற்பத்தியாகிக் கொண்டிருந்தது. இப்போது முன்னைவிட அதிக மக்கள் இத்தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர். உழவுத் தொழிலுக்கு அடுத்தபடி முக்கியத்துவம் பெற்றிருப்பது, நம் நாட்டில் நெசவுத் தொழிலேயாகும். எனவே, மத்திய அரசாங்கம் தன் தேவைகளுக்கு இத்துணிகளைப் பயன்படுத்திக்கொள்வதும், ரயில்வே போக்குவரத்துக் கட்டணத்தில் சலுகை காட்ட முடிவு செய்திருப்பதும், மாகாண விற்பனை வரி, ஏற்றுமதி வரி முதலியவை கைத்தறி நெசவுத் துணிகளுக்கும் நூலுக்கும் இல்லாதபடி செய்திருப்பதும், நடைமுறையில் உடனே வருமாயின், இதனால் ஒரு சிறு அளவு நன்மைதான் கைத்தறி நெசவாளர்களுக்கு ஏற்படும்.

எனவே, கைத்தறி நெசவுத் துணிகளின் விலைவாசிகள் மக்கள் பயன்படுத்தக் கூடியவாறு குறையுமாறு வழி செய்து, அவற்றின் தரத்தையும் உயர்த்தி, கைத்தறி நெசவுத் துணிகளை மில் துணிகள் போன்று ஆக்குவதற்கு வேண்டிய காலண்டரிங் இயந்திரங்களை வாங்கி யளித்து, மில்களின் போட்டி இத்தொழிலைக் குன்ற வைத்துவிடும் அளவுக்குப் போய்விடாதபடி தடுத்து, உள் நாட்டிலும் வெளி நாட்டிலும் கைத்தறி நெசவுத் துணிகளுக் கேற்ற மார்க்கட்டுகளை ஏற்படுத்திவைக்கும் பொறுப்பை அரசாங்கம ஏற்றுக்கொண்டு, உடனடியாக வேலை செய்தாலன்றி, இத் தொழிலைக் காக்கவோ, நிரந்தரமான நல்லநிலையை உண்டாக்கவோ முடியாது.

இப்போது விற்பனையாகாமல் தேங்கிவிட்ட கைத்தறி நெசவுத் துணி 2 லட்சம் பேல்கள் இருக்கின்றனவென்று தெரிகிறது. இவற்றை யெல்லாம் விற்பனை செய்ய வேண்டுமென்றால், சில மாதங்கள் வரையிலாவது வெளிமாகாண மில்களிலிருந்து வரும் துணிகளை அரசாங்கம் தடைசெய்து நிறுத்த வேண்டும். கையிலிருக்கும் துணிகளை வெளி நாடுகளுக்கனுப்பி விற்பனை செய்து தீர்க்க வேண்டும். நூல்களின் விலைவாசிகளைக் குறைக்க வேண்டும் நூல், சாயம், நெசவுக்கு வேண்டிய பிற பொருள்கள் குறைந்த விலையில் கிடைக்குமாறு செய்ய வேண்டும். இவற்றிற்கெல்லாம் மேலாக, இடைத் தரகர்களை இத்தொழிலிலிருந்து ஒழித்துக் கட்ட வேண்டும். நெசவாளர்களிடமிருந்து தரகர்கள் வாங்கி, விற்பனையாளர்களிடம் வந்து சேருவதற்குள் கைகள் மாறி மாறி வரும் முறை ஒழிய வேண்டும். இத்துறையில் அரசாங்கம் தலையிட்டு, நெசவாளர்களிடை ஒற்றுமையை ஏற்படுத்தி, கூட்டுறவு முறைகளை ஆங்காங்கே ஏற்படுத்தி, தரகர்களை அடியோடு ஒழித்து, மில் போட்டியிலிருந்து இத்தொழிலைக் காத்து; இதற்கு வேண்டிய காலண்டரிங் இயந்திர வசதிகளையும் செய்தளித்து; ஆக வேண்டிய வேலைகளைத் தீவிரமாகச் செய்தாலன்றி, இதில் ஈடுபட்டுள்ள 24 லட்சம் மக்களின் கதி அதோகதிதான். இத்தகைய இன்றியமையாத வேலைகளை மாகாண-மத்திய அரசாங்கங்கள் ஆர அமரச் செய்வதென்றால், இதிலும் அரசாங்கத்திற்கு இயற்கையாயுள்ள தாமதகுணத்தைக் காட்டுவதென்றால், இந்தியாவின் இரண்டாவது பெரிய தொழிலாகக் கருதப்படும் நெசவுத் தொழில் அழிந்து, லட்சக்கணக்கான மக்கள் பட்டினிகிடந்து மாளநேரிடும் என்பதை மாகாண அரசாங்கம் கவனித்து, மத்திய அரசாங்கத்தைத் தூண்டி, தீவிரமாக இத்துறையில் ஈடுபட்டுப் பணியாற்றவேண்டுகிறோம்.

வீரமான்யத்துக்கு முற்றுப்புள்ளி!

காங்கிரஸ் தியாகிகள் தமது தியாகத்தைக் காட்டி நிலப் தானம் செய்யும்படி அரசியலாருக்கு விண்ணப்பம் செய்த வண்ணம் இருக்கின்றனராம். இதனால் இதற்கோர் முற்றுப்புள்ளி வைப்பதென அரசியலார் திட்டமிட்டுள்ளனர். இது பற்றி அரசியலார் வெளியிட்டுள்ள அறிக்கையில், "இப்போதும் சில தியாகிகளிடமிருந்து மனுக்கள் வந்துகொண்டிருக்கின்றன. இவ்வாறு முடிவுக்குள் சகல வேலையும் முடிய வேண்டுமென்பதால் அனுபப வேண்டிய மனுக்களை இம்மாதம் 31-ம் தேதிக்குள் அனுப்பிவிட வேண்டும். அதற்குப பின்னர் வரும் மனுக்களைக் கவனிக்க வேண்டாமென்று கலெக்டர்களுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது" என்று கூறப்பட்டிருக்கிறது.

கொள்கை வழி நின்றோம் கடமையை ஆற்றினோம்

கற்ற பாடத்தைத் தலைவரிடமே கேட்டோம்

தூத்துக்குடியில் கழகத் தோழர்கள் முழக்கம்

தூத்துக்குடி, அக். 17—

திராவிட முன்னேற்றக் கழகக் கிளையின் துவக்க விழா தூத்துக்குடியில் சீர்தவழ—சிறப்புமிளிர கொண்டாடப் பட்டது. நிகழ்ச்சியில் குறிப்பிட்டிருந்தபடி தோழர்கள் காஞ்சி கல்யாணசுந்தரம், மு. கருணாநிதி இருவரையும் புகை வண்டி நிலையத்தில் வரவேற்க வந்திருந்த தோழர்களின் முகத்திலே-புதுக்களையும், புன்னகையும் அரும்பியிருந்த காட்சி அவர்கள் ஆர்வத்தின் படப்பிடிப்பாக இருந்தது. புகை வண்டி நிலையத்திற்கு வந்திருந்த தோழர்கள். எம், எஸ், சிவசாமி, கே. வி. கே. சாமி என். நடராசன், டி, ரத்தினம், இரா. இராமலிங்கம், ஆ. வேலாயுதம் மற்றும் பல முக்கியமானவர்களாவார்கள்.

நகரெங்கும், வழிநெடுக. "வாழ்க திராவிட முன்னேற்றக்கழகம்" என்ற வண்ணத் தட்டிகள் வாழ்த்து "பாடிக" கொண்டிருந்தன. நகரில் நிறுவப்பட்டுள்ள கிளைக் கழகங்கள் அனைத்தும் கொடிகளாலும், தோரணங்களாலும் வாழைமரங்களாலும் அலங்கரிக்கப்பட்டு அழகுற விளங்கின.

மாலை 6 மணிக்குத் தருவை மைதானத்தில் (வ. உ. சி. மைதானம்) துவக்க விழாப் பொதுக் கூட்டம் தொடங்கப் பெற்றது, பேரார்வத்தோடு குழுமியிருந்த பத்தாயிரம் மக்களின் பெருவாழ்த்தோடு!

கே. வி. கே. சாமி

கூட்டத் தலைவர் தோழர் கே. வி. கே. சாமி அவர்கள், பெரியாரின் கொள்கைக்கு முரண்பட்ட செயலை, ஏற்க முடியாத காரணத்தால் தான் புதுக் கழகம் அமைக்க வேண்டியநிலை ஏற்பட்டது என்றும் திராவிட முன்னேற்றக்கழகம் கொள்கையினின்றும் சிறிதும் வழுவாது நாட்டுப் பணியாற்றும் என்றும், முன்னுரையில் விளக்கிக் கூறினர்.

எம். எஸ். சிவசாமி

அடுத்துதோழர்எம்.எஸ்.சிவசாமிஅவர்கள் வாலிபர்களால் ஆகாதது எதுவுமில்லை என்றும் பெரும் பெரும் போராட்டங்கள் இளைஞர்களாலேயே வெற்றியடைந்திருப்பதையும், அதற்கு இளைஞர்களே தலைமை வகித்து நடத்தியிருப்பதையும் உலக வரலாற்றில் காணமுடிகிறதுஎன்றும், அதுபோலவே வாலிபர் ஒருவரைத் தளபதியாகக் கொண்டு வாலிபர்கள் அமைத்து நடத்தும் திராவிட முன்னேற்றக் கழகப் படை விரைவில் வெற்றி காணும் என்று கூறினர்.

காஞ்சி கல்யாணசுந்தரம்

தோழர், காஞ்சி, கல்யாணசுந்தரம் அவர்கள் பேசுகையில் பெரியார் அவர்கள் எங்களுக்கெல்லாம் பகுத்தறிவைப் பாதித்தார். அந்தப் பகுத்தறிவைக் கொண்டு சாதி-சமயம்-கடவுள்-மூட நம்பிக்கை-வாழ்க்கை முறை அத்தனையையும் அலசிப் பார்த்தோம். அவர் தந்த பகுத்தறிவு ஆயுதத்தை-அவர் கொள்கையை மீறி நடக்கத் துணிந்தபோது அவரிடமே உபயோகிக்க நேரிட்டது, கொள்கை உறுதி கொண்டவர்கள் நடக்கவேண்டிய முறைப்படி நாங்கள் நடந்துகொண்டதிலே யாரும் தவறு காண முடியாது. என விளக்கியதோடு, இன்றைய அரசாங்க நிர்வாக ஊழல்களையும், அதைப் பற்றிக் கவலையோ, கருத்தோ கொள்ளாமல் அமெரிக்காவில் உல்லாசப் பயணம் நடத்தும் பண்டித நேருவின் ஆட்சி முறை பற்றியும் எடுத்துரைத்து, ஏழை மக்கள் துயர் தீர—ஏக்கம் தொலைய-திராவிட முன்னேற்றக் கழகம் பணியாற்றும் என்பதாக நீண்ட நேரம் பேசினர்.

மு. கருணாநிதி

தோழர் மு. கருணாநிதி அவர்கள் 'திராவிட முன்னேற்றக் கழகம் ஏன் ஏற்பட்டது?' என்று நான்கு முனைகளிலிருந்தும் கேள்விகள் கிளம்புகின்றன; நாம் பலராயிற்றே—அவர்கள் சிலராயிற்றே—திராவிடக் கழகத்தையே கைப்பற்றியிருக்கக் கூடாதா என்ற கேள்வி நம்மிடையே உள்ள சிலரிடமிருந்து!

'முன்பு திராவிடர் கழகம் என்று பேசினர்...இன்று முன்னேற்றக் கழகம் என்று முழங்குகிருர்களே...இது என்ன புதிர்?' என்ற கேள்வி பொது மக்களிடமிருந்து!

'திராவிடர் கழகத்திற்கு எதிரிடையாக—துரோக சிந்தையோடு தானே புதுக்கட்சி உண்டாக்கி யிருக்கிருர்கள்?' இது பெரியாரின் ஆதரவாளர்களிடமிருந்து!

'திராவிட முன்னேற்றமா?...' அச்சத்தோடு—சிறிது நடுக்கத்தோடு அரசாங்கத்திடமிருந்து கிளம்பும் கேள்வி நாலாவது கேள்வி?...

இந்நான்கு கேள்விகட்கும் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு எம்முடையது, என்று விளக்கமுரைத்து. இயக்கத்தோழர்களின் மீது பெரியார் சுமத்தும் பழிகள் பொருத்தமற்றவை — வீணாகக் கற்பிக்கப் பட்டவை—என்பதற்கான காரணங்களைக் கூறி. சர்வாதிகாரத்தோடு மோதுதலவேண்டாமென்று ஒதுங்கியிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகம், எப்போதும் போலவே பழமை, பாசிசம் இவைகளைத் தாக்கித்தகர்க்கும் என்றும், இந்தி எதிர்ப்பு, அடக்குமுறை எதிர்ப்பு அறப்போர் விரைவில் தொடங்கப்படுமென்றும், திராவிடர் கழகம்—திராவிட முன்னேற்றக் கழகம் இரு முனைகளிலிருந்து பழமை—பாசிசம்இவைகளைத் தாக்குமென்றும், எதிரிகள் எங்கள் பிளவை சாதகமாக்கிக்கொள்ள நினைக்க வேண்டாமென்றும்—பிளவினால் பலஹீனம் ஏற்படாது — மாருக முன்னைவிடப் புதுவேகத்தோடு புதுக் கழகம் வேலை செய்யுமென்றும் கூறி நீண்ட நேரம் பேசினர். சொற்பொழிவாளர்களுக்கு, திராவிட முன்னேற்ற மாணவர்கழகத்தினரால் மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன.

பின், துணைச் செயலாளர் து. ரெத்தினம் அவர்கள் நன்றி கூற 'திராவிடநாடு திராவிடருக்கே' என்ற வீர ஒலியோடு துவக்கவிழா இரவு 9-30 மணிக்கு இனிது முடிவுற்றது.

பொய்ச் செய்திக்கு மறுப்பு

விருதுநகர், அக். 14—

விருதுநகர் தோழர் என். தங்கப்பழம் அவர்கள் கீழ்க்கண்ட மறுப்பு அறிக்கையை வெளியிட்டுள்ளார்கள் :—

"வெளியூர் 12-10-49 "விடுதலை"யில் விருதுநகர் திராவிடர் கழக அங்கத்தினர்கள் கூட்டம் நடந்ததாகவும், அதில் தோழர் எஸ். தங்கப்பழம் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும் ஒரு செய்தி "விசேஷ தந்தி" என்று பிரசுரமாயிருக்கிறது.

அச்செய்தியைக் கண்டு நான் திடுக்கிட்டேன், ஆச்சரியமும் கொண்டேன். ஏனெனில் யான் திராவிடர்கழகத் தலைவராகவோ, அங்கத்தினராகவோ இருக்க விரும்பவில்லை. அத்துடன் என் சம்மதத்தை யாரும் கேட்கவும் இல்லை."

எஸ். தங்கப்பழம்,
விருதுநகர்
14-10-49.

அழகர்சாமி நினைவுப் படிப்பகம்

கோவில்பட்டி, அக். 13—

இப்படிப்பகத்தின் கூட்டமொன்று 10-10-49-ல் நடைபெற்றது. அதுபோது ஷை கழகமும் திராவிட முன்னேற்றக் கழகத்துடன் இணைந்து பணியாற்றுவதென்பதோடு இன்னுமொரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. பின்பு கீழ்க்கண்ட செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது

செயலாளர்: — வி. எம். சாமி, துணைச் செயலாளர்:- வில்லியம் டேவிட்; பொருள் உறுப்பினர்:- ஜே. எஸ். பாண்டியன். ஏனைய செயற்குழுவினர்:— கே. வி தங்கம் (தலைவர்), கணபதிராமன் (துணைத் தலைவர்), கே. எம். குட்டி, அமீர், பழனிச்சாமி, மாரியப்பன், முத்து

மறுமலர்ச்சிக் கழகம்

மதுரை, அக். 17—

இவ்வூர் வடக்குமாசி வீதி மறுமலர்ச்சிக் கழகத்தின் கூட்டமொன்று. 5-10-49-ல் தோழர் பிச்சை அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. அதுபோது "திராவிட முன்னேற்றக் கழகத்தோடு ஷை கழகமும் இணைந்து பணியாற்றுவது" என்றும், இன்னும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டது. எனத் தோழர் அ. பிச்சை அறிவிக்கிருர்.

செல்வம் திராவிட முன்னேற்றக் கழகம்

மதுரை, அக். 12—

இவ்வூர் பொன்னகரம் மீனாட்சித் தோப்பு செல்வம் திராவிடர் கழகத்தினரின் கூட்டம், 9—10—49-ல் நடைபெற்றது. அதுபோது "செல்வம் திராவிடர் கழகம்" என்பதை, "செல்வம் திராவிட முன்னேற்றக் கழகம்" என மாற்றுவதாகத் தீர்மானிக்கப்பட்டது. மேலும் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் இனிது முடிந்தது. [செ—ர்]

கழக நடவடிக்கைகள்

செண்பகராயநல்லூர்:—இவ்வூர்க் கிளையின் சார்பில் 16—10—49 காலை 10 மணிக்கு, தோழர் எம். இராமமூர்த்தி அவர்களால் கரியாப்பட்டணம் புகைவண்டி நிலையத்திற்கருகிலும், பிறகு தோழர் இரா. இளவரி அவர்களால் தி. மு. க கட்டிடத்திற்கருகிலும், அதன் மேற்புறத்திலுள்ள இடத்திலும் தி. மு. க. கொடிகள் ஏற்றுவிக்கப்பட்டன. பின்பு, தோழர் முருகு இளங்கோ திராவிடநாட்டுப் பண் பாட, சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. (வி உ)

*   *   *

ரேப்பாளையம்:—இவ்வூர்க் கிளையின் சார்பில், 17—10—49-ல் தோழர் கே. கிருட்டினமூர்த்தி தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் கே.எஸ். சிவக்கொழுந்து இயக்கப்பண் பாடினர். தோழர்கள் ஏ. கே. இராமசாமி, கே. பி. சுப்பிரமணியம் ஆகியோர் பேசினர். பிறகு தோழர் எம். பழனிவேல் இல்லத்தில் தி. மு. க. கொடி ஏற்றுவிக்கப்பட்டு, நன்றி கூறக் கூட்டம் முடிந்தது. (வி உ)

*   *   *

எட்டயபுரம் :—இவ்வூர்க் கிளையின் சார்பில் நடுவிற்பட்டி குமரன் நிலையத்தில், 13—10—49-ல் தோழர் சு. கலிங்கன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது தோழர்கள் மேக. முத்து, சு. சண்முகவேலன், தி. ராமசாமி, சி. சுப்பையா, மு. வெற்றிவேலன் ஆகியோர் பேசினர். பின்பு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிந்தது. (வி-உ)

*   *   *

திருச்சேறை :—இவ்வூர்க் கிளையின் அங்கத்தினர்கள் கூட்டம் 16—10—49-ல் நடைபெற்றது. அதுபோது கீழ்க்கண்ட செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்:—கே. முருகையன்; துணைச் செயலாளர் :—பா. செங்குட்டுவன்; விளம்பர உறுப்பினர்:—வீ. சங்கரன்.

ஏனைய செயற்குழுவினர் :—கே. முருகையன், வீ. சங்கரன்; பா. செங்குட்டுவன், வீ. இராஜகோபால், எம். ஜெகன்னாதன், எம். மாரிமுத்து, டி. எஸ். கோவிந்தராஜலு, ச. கோபாலசாமி, டி. பி. அழகப்பன், வீ. இரத்தினம். இராசாங்கம். மேலும் நான்கு உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்ள செயற்குழுவுக்கு உரிமையளிக்கப்பட்டது.

பிறகு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிந்தது. (துணைச் செயலாளர்.)

*   *   *

சென்னை சூளை :—இந்நகர உட்கிளையின் செயற்குழுக் கூட்டம் 16—10—49-ல் செயலாளர் தலைமையில் கூடியது. அதுபோது செயலாளர் தோழர் பால்வண்ணன் ஒரு நீண்ட அறிக்கையைப் படித்தார். பின்பு மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. [செ-ர்]

*   *   *

நாகப்பட்டினம்:—இவ்வூர் நகரக் கிளையின் சார்பில் இவ்வூர் மருத்துவர் தெருவில், 15—10—49 அன்று காலை தி. மு. க. கொடியைத் தோழர் சி. தொளசி அவர்கள் ஏற்றுவித்தார். அதுபோது பல முக்கிய இயக்கத் தோழர்கள் வந்திருந்தனர். பிறகு முன்னேற்ற மருத்துவர் கழகம் அமைப்பது பற்றி ஆலோசிக்கப்பட்டது. (ஓர் செயலுறுப்பினர்)

*   *   *

விருதுநகர்:—இவ்வூர் 18-வது வார்டு நகர உட்கிளைச் சார்பில், 16—10—49 மாலை 5 மணிக்கு தோழர் ஜான் தலைமையில் கொடியேற்று விழா நடைபெற்றது. ஏராளமான தாழ்த்தப்பட்டத் தோழர்கள் வந்திருந்தனர். தோழர்கள் என். வி. நடராசன் ஏ. வி. பி. ஆசைத்தம்பி ஆகியோர் தி. மு. க. கொள்கைகளை எடுத்துக் கூறி, இரண்டு இடங்களில் தி. மு. க. கொடியை மக்களின் பெருத்த ஆரவாரங்களுக்கிடையே ஏற்றுவித்தனர். தோழர் செல்வம் அவர்களால் கொடி வணக்கம் பாடப்பட்டுத்தலைவர் முடிவுரைக்குப்பின், விழா முடிவுற்றது. (ந. நி)

*   *   *

தேனிசிற்றூர்கிளை-இக்கிளையின் செயற்குழுஉறுப்பினரும், உண்மை ஊழியருமானத் தோழர் பூ. சின்னன் அவர்கள் அகால மரணம் குறித்து 13-10-49ல் செயற்குழுக் கூட்டம் ஒன்று கூடி; அன்னார் குடும்பத்திற்கு அனுதாபம் தெரிவித்தது.

*   *   *

சென்னிமலை சிற்றூர்க்கிளை:—இக்கிளையின் கூட்டமொன்று 2—10—49 ல் கூடி, நான்கு தீர்மானங்களை நிறைவேற்றிற்று. பின்பு கீழ்க்கண்ட செயற்குழுத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:— பி. எம். பழனியப்பா; துணைச்செயலாளர்:— ச. சின்னுசாமி; நிதி உறுப்பினர்:— எஸ். எஸ். மணி; விளம்பர உறுப்பினர் ஆ. குழந்தைசாமி. ஏனைய செயலுறுப்பினர்கள்:— கே. எஸ். திருமலைசாமி, சி. எஸ். அலாவுதீன், மை. அ. முருகேசன், மா. மணி, கே. நாச்சிமுத்து. எனத் தோழர் ஏ. குழந்தைசாமி (வி. உறுப்பினர்) எழுதுகிருர்.

*   *   *

கோவை நகரக்கிளை:— தி. மு. கழகக் கொடியின் இருபுறங்களிலும் "அண்ணா வாழ்க!" "தமிழ் வாழ்க!" என்ற வாழ்த்தொலிகளுடன் கூடிய "பேட்ஜ்" விரும்புவோர், கோவை தேவேந்திர வீதி, தர்மலிங்கனர் கடையில் தன்னிடமிருந்து பெற்றுக்கொள்ளலாமெனத் தோழர் சி. வி. அய்யாசாமி அறிவிக்கிருர்.

*   *   *

சேலம் பொன்னம்மாப்பேட்டை நகர உட்கிளை:—இக்கிளையின் ஆதரவில் இவ்வூர் மல்லிச் செட்டித் தெருவில், தோழர் மு. கருணாநிதி அவர்களால் தி. மு. க. கொடி யேற்றுவிக்கப்பட்டது. கொடியேற்று விழாவிற்குத் தோழர் ஏ. சித்தையன் தலைமை வகித்தார். சுமார் 2000க்கு மேல் மக்கள் கூடியிருந்தனர்.

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்

அய்யம்பேட்டை, அக். 16—

இவ்வூர் திராவிட மாணவர் கழகத்தினர் 11—10—49 அன்று தோழர் முகமதுஅலி அவர்கள் தலைமையில் கூடியது. அதுபோது 'திராவிட மாணவர் கழகத்தை, திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம் என அமைக்கவேண்டும்" என்பதாகத் தோழர் ப. இராமநாதம் அவர்களால் கொண்டுவரப் பட்டத்தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. பிறகு தி. மா. மு. கழகத்திற்குச் செயற்குழுவொன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:— சி. நாகராஜன்; துணைச் செயலாளர்:— த. மாரியப்பன்; பொருள் உறுப்பினர்:— முகமது அலி. ஏனைய செயற்குழுவினர்:— சினிவாசன், சண்முகம், முருகையன், கோவிந்தராசன். பிறகு செயலாளர் நன்றிகூறக், கூட்டம் இனிது முடிந்தது எனச் செயலாளர் எழுதுகிருர்.

புதிய கழகம்-பழைய கழகம்

[1-ம பக்கத் தொடர்ச்சி]

கம் யாருக்கும் போட்டியல்ல அது பெரியாருடைய சிறந்த கொள்கைகளைத்தான கொண்டு வேலை செய்கிறது. நமமிடையே மோதுதல வேண்டாம, நாம நமது வேலையைத் தொடர்ந்து செய்வோம்" என்று கூறி முடித்தார். பின்னர், தோழர் செழியன் அவர்களும், திருப்பூர் எஸ். ஆர். சுப்ரமணியம அவர்களும பேசினார். தோழர் சுப்ரமணியம, பெரியார் எவ்வளவோ சர்வாதிகாரம செய்தும அன்பால் நாமபொறுத்து வந்தோம. ஆனால இத்திருமணத்தையும நம்மால் சகிக்க முடியவில்லை. எனவே தான் விலகினோம என்று கூறினார்.

பின்னர், கோவை திராவிட முன்னேற்றக கழகத்தின் சார்பாக, தோழர் பெத்தாம்பாளையம் பழனிச்சாமி அவர்கள் ரூபாய் 101(நூற்றி ஒன்று) ஐ மத்திய திராவிட முன்னேற்றக கழக வளர்ச்சிக்காக பொதுச் செயலாளர் தோழர் அண்ணாத்துரை அவர்களிடம அளித்தார். அண்ணா அவர்கட்குப பல சங்கங்கள், கழகங்கள், மாணவர் கழகங்கள சார்பாக மலர் மாலை யணிவிக்கப்பட்டது.

சேலம் நிகழ்ச்சிகள்

கொடியேற்று விழா

தோழர் அண்ணாத்துரை, பெத்தாமபாளையம பழனிச்சாமி ஆகியோர் 17—10—49 காலை 8-30 மணிக்கெல்லாம சேலம் வந்தனர். உடன சேலம அம்மாபேட்டை கிளையின் கொடியேற்று விழா நடைபெற்றது. அம்மாப்பேட்டை மெயின்ரோடில், அலங்காரமான பந்தல் அமைக்கப்பட்டு எங்கும திராவிட முன்னேற்றக் கழகக் கொடிகள் பறந்துகொண்டிருந்தன

தோழர் ஸ்டாலின் கே. ராமசாமி அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்து அண்ணா முதலியோரை வரவேற்றுப் பேசினார். பின்னர் தோழர் அண்ணாத்துரை அவர்கள் பேசினார். அதன் சாரம வருமாறு:- "தோழர்களே, உங்கள் ஆர்வத்தையும் எழுச்சியையும் கண்டு களிக்கிறேன். இன்று திராவிட முன்னேற்றக கழகக் கொடி யேற்று விழா நடக்கிறது நாம யாவரும நேற்றுவரை திராவிடர் கழகத்திலிருந்தவர்கள் தான இன்று அதை விட்டு விலகி திராவிட முன்னேற்றககழகத்தில பணியாற்றுகிறோம். இந்த மாறுதல மன மகிழ்ச்சியோடு ஏற்பட்டதல்ல. இதற்கான சமபவங்கள், வாதப் பிரதி வாதங்கள், விளக்கங்கள யாவும கடந்த இரண்டுமாதங்களாகப் பத்திரிகை வாயிலாக நீங்கள் படித்து, சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்திருப்பீர்கள். எனவே, அதைப பற்றிப பேசவேண்டிய அவசியமில்லை. நாம திராவிடர் கழகக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டேதான பணி புரிய [illegible]றப்பட்டிருக்கிறோம். இது, [illegible]த்தகைய நிலைமை நிர்பந்தத்[illegible]ல ஏற்பட்டது. ஆனால இன்று சில இடங்கேடிகள் நம்மிடையே பேதமூட்டப் புறப்பட்டிருக்கின்றனர். இது எத்தனை நாளைக்குச் செல்லும்? நம்மிடையே போராடும உணர்ச்சி இல்லை, ஆனால் போட்டி யுணர்ச்சி, வேலை செய்வதில். உண்டு நாம் பெரியார் திருமணத்தால் மனம் புண்பட்டோம். ஆற்ற முடியாத புண், எனவே அவர் தலைமையைவிட்டு விலகி, அதே கருத்துக்களைத்தான் நாட்டில பரப்புகிறோம். அதற்கான ஆதரவு. தாருங்கள், பொறுப்புணர்ந்து நடவுங்கள் என்று சுமார் ஒரு மணி நேரம் பேசி, கழகக்கொடியை ஏற்றுவித்தார். அண்ணாவிடம் 12 வயது சிறுவன் புருஷோத்தமன 101 காலணா கொண்ட பண முடிப்பும், 8 வயது சிறுவன ஜி ரவீந்திரன 101 காலணா கொண்டதும் அளித்தனர்.

ஓமலூர் நிகழ்ச்சி

துவக்கவிழா

உடன. அண்ணா முதலியோர்கள் காரில் புறப்பட்டுச் சுமார் 10 மணிக்கெல்லாம சேலத்திற்கடுத்த ஓமலூருக்குச் சென்றனர் ஓமலூர் கண்டிராத காட்சி. அத்தனை பெரிய கூட்டம சேர்ந்துவிட்டது அண்ணா, கூட்டத் தலைவர் பக்கண்ணன முதலியோர் காரில ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். மிகப் பிரமாண்டமான ஊர்வலம ஊரின் முக்கியத் தெருக்களின். வழியாகச் சென்றது. வாத்தியங்கள் கொட்டி முழங்கின. இடையிடையே மக்களால அண்ணாவுக்கு மலர்மாலையணிவித்து மக்கள ஆர்வம காட்டினர். ஊரெங்கும் ஒரே குதூகலக் காட்சி. எங்கு நோக்கினும மக்கள் திரள். கழகக் கொடிகள். இத்தகைய பிரமிக்கத் தக்க வரவேற்புடன் ஊர்வலம ஓமலூர் நேரு டூரிங் டாக்கீசை அடைந்தது. ஊர்வலத்தைத் தோழர்கள பேபி, முத்துமலலப்பன, கே. ஆர். ராமச்சந்திரன, ஏ. பழனிசாமி, ஆர். அமீர் சாயபு, கே. ஆர். குப்புசாமி ஆகியோர் முன்னின்று நடத்தினர். கொட்டகைக்குள பெரிய கூட்டம் ஏற்கெனவே கூடியிருந்தது

தோழர் எஸ. கே பேபி அவர்கள. தோழர் ப. கண்ணன அவர்களைத் தலைமை தாங்குமபடிக் கேட்டுக்கொண்டார். அதனைத் தோழர் எஸ். ஆர் ஆத்தாரி அவர்கள் ஆமோதித்தார். தோழர். ப. கண்ணன அவர்கள தலைமை வகித்து, கூட்டத்தின நோக்கத்தை விளக்கினார். அவர். தமது பேச்சில, திராவிடர் கழகக் கொள்கைகளை மேலும தீவிரமாக, ஜனநாயக முறையில வளர்ப்பதே திராவிட முன்னேற்றக் கழகத்தின நோக்கம் என்று எடுத்துரைத்தார்.

பின்னர் பெத்தாம்பாளையம் பழனிச்சாமி அவர்கள். நிலைமையை விளக்கிச் சொற்பொழிவாற்றினர். அடுத்து தோழர் சேலம் ஏ. சித்தையன் அவர்கள் பேசினர். அவர்கழக நிலையை விளக்கிவிட்டு. நாட்டில தற்போதுள்ள நெசவாளர் குறைகளை நன்கு விளக்கிப பேசினர். 'இன்று சேலம போன்ற கைத்தறி நெசவாளர்கள் படும் அவதி துயரம் கணக்கற்றவை. அரசாங்கம் அதற்காக ஆவன செய்ப வேண்டும. இன்று பவானி அணைக்கட்டில் மூவாயிரம் பேருக்கு மண் சுமக்கும் வேலை கொடுத்துவிட்டதால மட்டும் அவர்களின குறைகள் தீர்ந்துவிடாது. இது பெருமையுமல்ல. இந்த நிலை நீடித்தால், நிலைமை மோசமாகி நாட்டிலே கொடிய பஞ்சம தலை விரித்தாடலாம். அந்த நிலைக்கு நாட்டை நடத்திச் செல்லாமல் சர்க்கார் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். அதற்கான கிளர்ச்சிகளை திராவிட முன்னேற்றக கழகம் நடத்தியே தீரும் என்று உறுதி கூறினர் பிறகு ஓமலூர் திராவிட முன்னேற்றக கழகத்தின் சார்பாக, மத்திய திராவிட முன்னேற்றக கழகத்திற்கு, தோழர் எஸ. கே பேபி அவர்கள ரூபாய் 101 (ரூபாய் நூற்று ஒன்று) கொண்ட பணமுடிப்பைப பொதுச்செயலாளர் தோழர் அண்ணாதுரை அவர்களிடம் அளித்தார் அதன் பின் அண்ணாதுரை அவர்கள் பேசினார். கழக நிலை, தற்கால அரசியல் நிலை, கைத்தறி நெசவாளர் குறைகள், அயல நாடுகளிலுள்ள நமது அகதிகள். ஆகிய முக்கியப்பிரச்சினைகளைப் பற்றிப் பேசினார்.

சேலம் நண்பகல் நிகழ்ச்சி

அரிசிப்பாளையம் கிளை கொடியேற்று விழா

ஓமலூர் கூட்டம் முடிந்த உடன் தோழர் அண்ணாதுரை முதலியோர் புறப்பட்டு பகல் 12-30-க்கு சேலம வந்தடைந்தனர், வந்ததும சேலம அரிசிபபாளையம திராவிட முன்னேற்றக கழகத்தின கொடியேற்று விழா நடைபெற்றது. இவ்விழா அரிசிப்பாளையம் லாடா குப்புசெட்டித் தெருவில நடந்தது. திரளான மக்கள கடும் வெயிலையும்பாராது கூடியிருந்து விழாவைச் சிறப்பித்தனர். தோழர் ஏ. சித்தையன அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கி நடத்தினர் அண்ணா அவர்கள குறிப்பிட்டதாவது:—

"தோழர்களே! நாம் நமது தலைவரிடமிருந்து விலகிவேறு கழகத்தின் பேரால் வேலை துவக்கியுள்ளோம. இதன் காரணம் யாவும நீங்கள் அறிந்ததே. பலவும் பத்திரிகைகள் வாயிலாகப் படித்திருக்கிறீர்கள். நான் எனது சுயநலத்திற்காக இதனை ஆரம்பித்ததாகப் பிரசாரம் நடக்கிறது, நடத்தப்படுகிறது, அப்படியொன்றும் எனக்கில்லை. சுயநலம் என்றால் நான என்ன வேண்டுமானாலும் திராவிடர் கழகத்திலிருந்தே பெற்றுக்கொள்ள முடியும; முடியாதகாரியமல்ல. நடக்காத நிகழ்ச்சியுமல்ல. இத்தகைய பிரசாரத்தைக் காதில் வாங்காது ஆக்க வேலையில நாம ஈடுபட வேண்டும நமது முன்னேற்றக்கழகம பெரியார் கொள்கையின மீது தான் கட்டப்பட்டுள்ளது. இதுவரை பழமையையும் பாசீசத்தையும் தாக்க, போக்க, திராவிடர் கழகம் பாடுபட்டு வந்தது அது ஒற்றைக் குழல் துப்பாக்கியாக விளங்கியது இப்போது திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றியதால் பழமையையும பாசீசத்தையும் தாக்கிட, போக்கிட இரட்டைக் குழல் துப்பாக்கியாகி விட்டது. திராவிடர் கழகத்திற்கு இது போட்டியலல. ஒரே கொள்கை கொண்டது. நாம் திருமணம் பற்றிய வீண் விவாதத்தில் இனி ஈடுபடவேண்டிய அவசியமில்லை. இனிமேல் கொள்கை வழி நடப்போம, காலம் நமமுள்ள உள்ள வித்தியாசத்தை ஒருக்கால சரிப்படுத்தலாம அது நமது உழைப்பை, உற்சாகத்தை ஊக்கத்தைப் பொறுத்துத் தான உள்ளது. உழைப்போம உறுதியோடு உள்ளம தளராமல, உற்சாகத்தோடு. அதற்கான பணிபுரிய வாரீர் என உங்களை அழைக்கிறேன். வரவேற்கிறேன், வாலிபர்களையும் தோழர்களையும்" என்று இன்னும பல திறப்பட்ட பிரச்சினைகளைப் பற்றிப் பேசி முடித்து. கழகக் கொடியை ஏற்றுவித்தார்.

பிற்பகல் நிகழ்ச்சி

செவ்வாய்ப்பேட்டை—கிளை கொடி யேற்று விழா

மாலை சுமார் 3-30 மணிக்கு சேலம செவ்வாய்ப பேட்டை திராவிட முன்னேற்றக் கழகக் கிளையின் கொடியேற்று விழா அலங்காரமானபந்தலில பெருந்திரளாக மக்கள் கூடியிருந்தனர். தோழர் ஆர். நாராயணசாமி அவர்கள், விழாவிற்குத் தலைமை தாங்கினார். அவர் செவ்வாய்ப் பேட்டையில் கழகத்திற்கென்று தனிக் கட்டிடம கட்டப் பெரும் பொறுப்பேற்றுக் கட்டி முடித்தார். அவருக்குக் கழகத்தார் நன்றி தெரிவித்தனர். பின்னர் தோழர் அண்ணாத்துரை பேசினார்.

"தோழர்களே! நான் ஏற்கனவே சில கூட்டங்களில் குறிப்பிட்டபடி பெரியார் திருமணம் பற்றிய பேச்சு, துவக்க விழாவாகிய இன்றோடு கடைசிப்பேச்சாகத்தான் இருக்கும. நாம திராவிடர் கழகத்தின அடிப்படைக் கொள்கையைத்தான் கொண்டிருக்கிறோம. நாம விலகினதற்குக் காரணம், கழகத்தில, ஏற்பட்ட எதிர்பாராத நிகழ்ச்சி நம்மைத் திகைக்க வைத்து விட்டது. திருமணம்—தவறு—ஆற்ற முடியாத புண். தாங்க முடியாத பாரம. எனவே விலகினோம நம்மிடையே ஏற்பட்ட கருத்துக் கொதிப்பினாலும், நிகழ்ச்சி நெருப்பினாலும நாம் விலக நேர்ந்தது. நான் கட்சியில எனக்காக எதையும் எதிர்பார்த்துவரமாற வில்லை நான் கேட்டு மறுத்த பதவி, செலவாக்கு கிடைக்காமற் போகவில்லை. கேட்டதைத்தரமறுக்கதுண்டா தலைவராவது—நீங்களாவது. எதைப் பெற்று இழந்துவிட்டேன்—எதுவுமில்லை பே. நான் தான் அதன் தளபதி, செயலாளன எல்லாம. எனக்காக அல்ல நான் வெளிபேறியது: கொள்கைக்காக என்பதை மனதில் கொள்ளுங்கள். திராவிட சமுதாயம், பொருளாதாரம், அரசியல்சமுதாயம ஆகிய மூன்று துறைகளிலும விடுதலை பெற்றுக் தனியரசு செலுத்த வேணடும் என்பதே நமது குறிக்கோள் இதற்கான ஆக்கவேலைகளபுரியுமதிட்டம் நம்பிக்கை, நாணயம, நீதி, நேர்மை கொண்டோர் வருக! வருக! என்று வரவேற்கிறேன என்று இன்னும் முக்கிய பிரச்சினைகளைப பற்றிப்பேசி முடித்துக் கழகக்கொடியை ஏற்றினார். அதன பின் கூட்டம இனிது முடிந்தது.

மாலை நிகழ்ச்சி

விக்டோரியா மார்க்கெட் மைதான மாபெருங்கூட்டம்

மாலை 5 மணிக்கெல்லாம் சேலம் விக்டோரியா மார்க்கட் மைதானத்தில மக்கள் திரளாகக்கூடினர். கூட்டம சேலத்தின் பல கிளைகளின ஆதரவிலும் கூட்டப்பட்டது. கூட்டத்திற்கு பேளுக்குறிச்சி பெருநிலக்கிழாரும், சேலம் மாவட்டத் தலைவருமான ஜி. பி. சோமசுந்தரம அவர்கள் தலைமை தாங்கினார்கள். அவர் தமது தலைமை உரையில பேசியதாவது:—

"தோழர்களே நாம் சற்றும் எதிர்பாராதபடி நமது தலைவர் பெரியார் திருமணம செய்து கொண்டார். அதைப்பற்றிய வாதங்கள் யாவும "விடுதலை" "திராவிடநாடு" "மாலை மணி" ஆகிய பத்திரிகைகளில மூன்று மாதங்களாக நடந்தது. அதனை நன்கு படித்து சீர்தூக்கிப் பார்த்து நீங்கள ஒரு முடிவிற்கு வந்திருப்பீர்கள. பெரியார் முறை தவறி நடந்துகொண்டார். நமக்குப் பிடிக்கவில்லை. தடுத்தோம. கேட்கவில்லை. எனவே விலகி விட்டோம். விலகினாலும் அதே கொள்கையை திராவிட முன்னேற்றககழகத்தின பேரால நடத்துகிறோம. இதனை நீங்கள நன்றாகக் கேட்டு, சிந்தித்து திராவிட முன்னேற்றக் கழகத்தில் பங்கு கொள்ளுமபடி வேண்டுகிறேன்".

பின்னர் தோழர் அண்ணாதுரை பேசினார். அண்ணாத்துரை தமது சொற்பொழிவில மிகமிக விளக்கமா

[தொடர்ச்சி [illegible]-ம் பக்கம் பார்க்க]

அரசாங்கம் அழைக்கிறது!

153-A சட்டப்பிரிவின் கீழ் நடவடிக்கை எடுத்திருப்பதாகக் கூறி, தோழர் சி என். அண்ணாத்துரையைத் திருச்சி சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில 31—10—49 ல் ஆஜராகும்படி, சம்மன உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது

புதிய கழகம்-பழைய கழகம் :

(5-ம பக்கத் தொடர்ச்சி)

க் 'கழகனிலை'யைப் பற்றிப் பேசினா. (முழுப் பேச்சு பின்னர் வரும்.)

பெரு மழை வர இருந்ததால் கூட்டம ஏழு மணிக்கெல்லாம் முடிந்து விட்டது

உடுமலைப்பேட்டை நிகழ்ச்சி

18-10-49 மாலை 4 மணிக்குத் தோழர் அண்ணாததுரை, பெத்தாமபாளையம பழனிச்சாமி முதலியோா உடுமலைப பேட்டை வந்து சேர்ந்தனர். உள்ளூர் தோழாகளும சிறிது நேரம முககிய விஷயங்களைப பற்றிக கலந்து பேசினா. பின்னா மாலை 6 மணிக்கு உடுமலை கிருஷ்ணா டாககீசில், திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழா நடைபெற்றது. உடுமலை நகரசபைத் தலைவர் கனகராஜன் அவர்கள், தோழா பெத்தாம்பாளையம பழனிச்சாமி அவர்களை விழாவிற்குத் தலைமை வகிக்கும்படி கேட்டுக் கொண்டார். தோழர் கனகராஜன அவர்கள், திராவிடா கழகத்தின் கொள்கைகளை ஜனநாயக முறையில் நடத்திச செலவதற்காகத்தான் திராவிட முன்னேற்றக் கழகம தோனறியிருககிறது என்று விளககிப பேசினா். இதனை கணியூர் தோழா முருகேசன அவர்கள ஆதரித்துப் பேசினர்.

தோழர் பெத்தாம்பாளையம் பழனிச்சாமி அவர்கள், விழாவிறகுத் தலைமை வகித்து, திராவிட கழகத்திலிருநது விலகி திராவிட முன்னேற்றக கழகம் தோன்றுவதறகான சூழ்நிலையைப் பற்றி விரிவாக விளக்கினர்.

மதுரைமுத்து

அடுத்தபடியாக மதுரை அழகரடி முத்து அவர்கள் பேசினா். அவர் பேசும்போது இன்றைய சாககார் கண மூடிததனமாக நடநதுகொள்ளும் போக்கினைக் கண்டிததார். அதுவுமில்லாமல் நாட்டில் ஒரு கட்சியினர் பலாத்காரச செயலில் இறங்குவதாகக கருதி கடும நடவடிக்கை எடுததுக்கொள்ளுபசாககிலே மிகவும் மிருகத்தனமான செயல்களில் இறங்குவதையும. அதே சாககில், போககில் எல்லாக கடசிகளையும நசுககி, அடக்கிவிட முனைவதை வன்மையாகக கண்டிததுப்பேசினா. கடைசியாக, தோழர் அண்ணாத்துரைஅடிககடி கூறி வருவதுபோல, ஒரு கட்சி அலலது இயககம் நலல பலன் தர வேண்டுமானல, அது பலதரப்பட்ட சக்திகளையும் தன்னுள் கொண்டு பணியாறற வேண்டும். அந்த பலதரபபட்ட சக்திகளிலே, தான் பேச்சாளியல்ல வென்றும, அதிகம் பேசப் பழககமிலலையென்றும, கட்சியின கொள்கைகளைக் கடைப் பிடித்து நிறைவேற்றும் தொண்டன் என்றும் கூறினா.

அடுத்துத்தோழர்அண்ணாத்துரை பேசினா். அதன் சுருககம்:—"தோழர்களே! இன்று கூடியிருககிறோம், திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழா நடத்த. இது நமககுச் சந்தோடமான காரியமல்ல, சங்கடமானதுதான். என்? நாம நமது தலைவர் பெரியாரை விட்டுப் பிரிநது, திராவிடர் கழகததை விட்டு விலகி, வேறு கழகம, "திராவிட முன்னேற்றக கழகம" அமைதது அதனமூலம வேலை செய்கிறோம இது ஏன? எதனல்? என்பது பற்றி கடநத இரண்டு மூன்று மாதஙகளாககவே பத்திரிகைகளில படிததுத தெரிந்திருப்பீர்கள். அனறியும, எனக்கு முன் பேசிய தோழர்கள் கனகராஜன், முருகேசன், பெததாமபாளையம பழனிசசாமி; மதுரை அழகரடிமுத்து ஆகியோா மிகவும விளககிப பேசினர். பெரியார ஒரு திருமணம செய்து கொணடார், அது பொருந்தாத் திருமணம. 72-வயது கிழவருக்கும 27 வயது மாதிற்கும திருமணமபொருநதாது, கூடாது அதனால நமதுகழகக கொளகை, அதன் தூய்மை பாழபடும என்று, எடுதது கூறினேம. வேண்டுகோள விடுததோம. அதை அவர் மதிககவில்லை, மாறாக மன வேதனையை அதிகப்படுததினா. மணம் முடித்துக கொணடார்.

நாம இதுவரை அவருககு அவருடைய சாவாதிகாரத்திறகு அடஙகி நடநது வநதோம, அவரிடம நமககிருநத அன்பின காரணததால, நனறி விசுவாசததால. இபபோது, அவர் காலம வரை மட்டுமல்ல, அவருக்குப்பினனும அவர் ஏறபடுததும ஏறபாட்டுககும, அடஙகிசசெல்ல வேண்டிய நிரபபநத நிலைககு நமமையும. கழகததையும அடகு வைககத துணிநது விட்டார். இதனை நாம எபபடிப் பொறுததுககொள்ள முடியும, எபபடிச்சகிக்க முடியும, பின்பற்ற முடியும்? ஜனநாயக உணர்ச்சி நமமிடம அருப்பியது. அதன காரணமாக நாம அவரை விட்டு விலகினேம். வேறு கழகம அமைததுக கொண்டோம, "திராவிட முன்னேறறக கழகம" என்ற பேரால, நாம வசிக்கும வீடு ஜப்தி செய்யபபட்டு நாளை ஏலததில போகப்போகிறது என்றால், நாம இன்றே நமக்கு வேணடும தட்டுமுட்டுச்சாமானகளை எடுததுக்கொணடு வெளியேறி விடுவதைப்போல, நாமும், திராவிடர் கழகம், நமமைவிட்டு வேறிடததில் ஒப்படைக்கபபடுவதைக கணடு மனம பதைததோம அமமையாரிடம் அடகுவைக்கப்படுவதைக் கண்டு மனம் நொந்து, திராவிடர் கழகமாகிய நமது வீட்டைக் காலி செய்துவிட்டு, தட்டுமுட்டுச் சாமான்களோடு வெளியேறி விட்டோம். அதாவது அங்குள்ள சிறந்த தொண்டர்கள். உழைப்பாளிகள். பேச்சாளிகள், எழுததாளாகள. நடிகர்கள் ஆகிய அததனை இயங்கும் சகதிகளும நமமோடு வந்து விட்டன.

சுருங்கச் சொல்ல வேண்டுமானல்; மேலபாகம கெட்டுப போன மோட்டர் வண்டியிலுள்ள என்சினை மோட்டாரை இயங்க வைக்கும சகதியை எடுதது, வேறு மோட்டாரில பொருததி ஓட்டுவதைப் போல, நாங்கள் திராவிடா கழகத்தின் இயங்கும சகதிகளை ஒன்று திரட்டி, 'திராவி—முனனேற்றக்கழகம்' என்ற மோட்டாரில பொருததி ஓட்டுகிறோம். பெரியாருடைய கொள்கைகளை நாட்டில பரபப முடியும் என்ற நமபிக்கையோடு, உறுதியோடு நாங்கள் வேலை செய்கிறோம" என்று மேலும் விளக்கிப பேசினர். அடுத்தபடி, திராவிடாகழகம் திராவிட முனனேற்றக்கழகம் என்ற இரு பிரிவை, பேதம, பிளவு என்று கருதி, மாற்றுக் கட்சியினரும, சர்க்காரும் நமமை அடககும் வண்ணம நாம நடநதுகொளளக் கூடாது. கொள்கையை முன வைதது வேலை செயய வேண்டும என்று வலியுறுத்தினர்.

மேலும், திராவிட முன்னேறறக கழகத்தினா், நாட்டிலே நல்லறிவுப பிரசாரம புரிய வேணடும், நாட்டு நிலையை நன்கு விளக்கிட வேணடும. அதுமட்டுமலல, உலக நிகழ்ச்சிகளை விளககி, அதனல் உலகின் போககு நமது நிலைமை எப்படி பாதிக்கிறது, என்றெலலாம விளககி, உலக அறிவு, ஏற்றபடியான நிலைமையை ஊராள்வோா நிலைமை, திறமை, கொடுமை முதலியவற்றை மக்கள முன் எடுததுரைதது அறிவுப்படை திரட்ட வேணடும. நம நாட்டிலிருநது வெளிநாடுகளுககு இன்னமும் கூலிகள் ரப்பர் தோட்டம், தேயிலைத் தோட்டங்கட்குசசெல்வதைத்தடுகக சர்க்கார் முனைய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

திராவிடம் பொருளாதாரத் துறையில், வடநாட்டுப்படையெடுப்பிலிருந்து தபப வேண்டும், அரசியலில் மத்திய சர்க்கார் பிடியிலிருந்து விடுபட வேண்டும், சமுதாயததுறையில் மூட நம்பிககை, பழமையின பிடி முதலியவற்றிலிருந்து மீட்சி பெற்று நாடு நலலறிவு பெற்றுவிளங்க வேண்டும. என்ற மூன்று சிறந்த கோட்பாடுகளைக் கொண்டு இயங்கும், திராவிட முன்னேறறககழகம் அதற்கான முறையில் வேலைசெய்ய வாலிபாகளும், பொது மக்களும முனவர வேண்டும, என்று கேட்டுககொணடு, உடுமலைப் பேட்டையில் திராவிட முன்னேற்றககழகம் அமைதத தோழர்கட்கும், பொதுமக்கட்கும் நன்றி தெரிவிதது பேசசை முடித்துககொணடார்.

இரவு நாடகம்

18-10-49 இரவு 10 மணிக்கு உடுமலைப்பேட்டை கிருஷ்ணா டாககீசில், ஜோதிநாடக சபையார் நடிதத "சநதிர குப்தா" என்ற நாடகத்திறகு தோழர் அண்ணாத்துரை தலைமைவகித்தார். நாடக நடுவே தோழர் அண்ணாத்துரைநடிகர்களையும் கதை ஆசிரியரையும பாராட்டிப் பேசினர். அந்த நாடக ஆசிரியர் தோழர் இரெ. கரிகாலன் அவாகள், திராவிட முன்னேறறக கழகத்தின் வளர்சசிககாக அண்ணாவிடம் 51 ரூபாய் கொண்ட ஒரு பண முடிப்பை அளித்தார். உடன் தோழர் பெததாமபாளையம் பழனிசசாமி அவாகள், அபபணமுடிப்பு அளிதத தோழர்களின் ஆர்வததிறகு நனறி செலுத்தி, அவா தநத பணமுடிபபை அந்த நாடக சபாவின் முன்னேற்றத்திற்குச் செலவிடுமபடிக் கேட்டுக் கொண்டு திருப்பியளிதது விட்டார். உடுமலைப்பெட்டையில் கழகத் தோழர்களும், மாணவாகளும் பெருந்திரளாகக் கடைசிவரை அண்ணாவுடனிருந்து, யாவற்றையும கவனிததனர். யாவற்றிலும, திராவிட முன்னேற்றககழக அமைப்புக்குழு உறுப்பினா வெங்கிடாசலம அவாகள், கலந்து பெருமபணி புரிந்தது குறிப்பிடததககதாகும்.

(தொடரும்)

தூத்துக்குடியில் நாடகம்

தோழர் அண்ணத்துரையும் அவர் குழுவினரும் நடிக்கும், **சந்திரமோகன் — நீதிதேவன் மயக்கம்** எனும் இரு நாடகங்களும், தூத்துக்குடியில், **26. 27 சனி, ஞாயிறு** ஆகிய நாட்களில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. திராவிட முன்னேற்றக் கழக வளர்ச்சிக்கான நிதி திரட்டுவதற்கு, மேற்படி நாடகங்கள் நடத்தப்பட இருப்பதால், திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் இதற்கான ஆதாவு திரட்டும்படி கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள். இது சம்பந்தமாக தூத்துக்குடி தோழர் கே. வி. கே. சாமி சென்னை வந்து, தோழர் அண்ணத்துரையுடன், கலந்து பேசிவிட்டுச் சென்றிருக்கிருர்.

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

23-10-49

காஞ்சிபுரம்:—	சி. என். அண்ணதுரை, கே. அன்பழகன. சத்தியவாணிமுத்து. சி. டி. டி. அரசு, ஏ ஆர் வெங்கட்ராமன்.
திருவாரூர்.—	இரா. நெடுஞ்செழியன், ஈ. வெ. கி. சமபத்
திருவண்ணமலை:—	சி. பி. சிற்றரசு, கே. ஏ. மதியழகன.
கடலூர் (ஓ. டி.) :—	ஏ சித்தையன், என. வி. நடராசன்
சுண்டக்காமுத்தூர்:— (கோவை)	ஜி. என. ராஜு
திண்டிவனம் :—	இரா இளம்வழுதி, இராமாமிர்தத்தம்மையார். கலைமணி
வத்தலக்குண்டு :—	டி. கே. சீனிவாசன்
அய்யன்பாளையம்:—	இரா. சு. தஙகப்பழம், கே. வி. கே. சாமி. வெ. முத்தடிகள்

24-10-49

திருத்துறைப்பூண்டி:—	ஈ. வெ. கி. சமபத்

25-10-49

கூடலூர் (மதுரை) :—	ஏ. வி. பி. ஆசைத்தம்பி, எஸ். உத்தண்டன், இரா. துரைராசன
தியாகதுருக்கம்:—	என. வி. நடராசன், ஏ. சித்தையன

26-10-49

தேனி:—	ஏ. வி. பி ஆசைத்தம்பி

திராவிட முன்னேற்றக் கழகம்

★

இதுவரையில் தழைத்துள்ள கிளைகள்

233

இனி நடப்பவை

சென்னை, கோடம்பாக்கம— திராவிட முன்னேற்றக் கழகம்— சென்னை நகர கோடம்பாக்கம் உட்கிளையின் செயற்குழுக் கூட்டம், 23-10-49 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு, ஆற்காடு ரோடு 42-வது எண்ணுள்ள இல்லத்தில் நடைபெறும். செயலுறுப்பினரனைவரும் அழைக்கப்படுகிருர்கள்.

தேவை

புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் ஓர் கூட்டுறவு வைத்திய சகைத்திற்கு அநுபவமும் தேர்ச்சியும் பெற்ற ஒரு டாக்டரும், மருத்துவச் சிகிச்சை பயின்ற மாதர்களிருவரும் தேவை. ஊதியம், பஞ்சப்படி சர்க்கார் விகிதப்படி. உடனே விண்ணப்பிக்கவும்.

A. S. T.
C/o 'மாலைமணி' சென்னை

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/65, Muthumari Chetty Street, Mad…